முக்கிய வார்த்தைகள்:
*பிள்ளைகள்*
*பொறுப்பு*
*ஆதரவளிப்பது*
*பாதுகாப்பு*

# இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
**02 அக்டோபர் 2026 / 20 ரபீவுல் ஆகிர் ஹிஜ்ரி 1448**

## <u>குடும்பமும் சமூகமும்: நமது பிள்ளைகளுக்கான அன்பு உருவாகும் இடங்கள்</u>

**إِنَّ الْحَمْدَ لِلَّهِ، نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ، وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا، مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِيْنَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيل: يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ.**

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]** அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து விலகி இருப்பதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீது தக்வா [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது குடும்பங்களுக்கு அருள் புரிந்து, நமது **பிள்ளைகளையும்**, சந்ததியினரையும் பாதுகாப்பானாக! மேலும் நம் அனைவரையும் அவனது சொர்க்கத்தில் ஒன்று சேர்ப்பானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

**குழந்தைகள்** அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் நமக்கு வழங்கப்படும் விலைமதிப்பற்ற அருட்கொடைகளாகவும், நம்மிடம் ஒப்படைக்கப்படும் அமானிதங்களாகவும் இருக்கின்றார்கள். அவர்களின் இருப்பு, நமது வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் கொண்டு வருகிறது. நமது வமிசத்தைத் தொடரச் செய்கிறது; நமது சிறந்த மரபை முன்னோக்கி எடுத்துச் செல்வதாகவும் இருக்கின்றது என்பதை நாம் நம்புகிறோம். எனவே தான், திருக்குர்ஆனின் "அல்-ஃபுர்கான்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 74-வது வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பிரார்த்தனையைத் தொடர்ந்து செய்து வருமாறு நாம் ஊக்குவிக்கப்படுகிறோம். அல்லாஹ் கூறுகிறான்:

وَٱلَّذِينَ يَقُولُونَ رَبَّنَا هَبۡ لَنَا مِنۡ أَزۡوَٰجِنَا وَذُرِّيَّٰتِنَا قُرَّةَ أَعۡيُنٖ
وَٱجۡعَلۡنَا لِلۡمُتَّقِينَ إِمَامًا ٧٤

பொருள்: "*மேலும், அவர்கள் [நல்லடியார்கள்]: "எங்கள் இறைவா! எங்கள் மனைவியரிடமும், எங்கள் சந்ததியரிடமும் இருந்து எங்களுக்குக் கண்களின் குளிர்ச்சியை அளிப்பாயாக! இன்னும் பயபக்தியுடையவர்களுக்கு எங்களை இமாமாக [வழிகாட்டியாக], சிறந்த முன்மாதிரியாக ஆக்கி, அருள் புரிவாயாக!" என்று பிரார்த்தனை செய்வார்கள்*"

**அன்பிற்குரிய சகோதரர்களே**!

நிச்சயமாக, **குழந்தைகள்** அல்லாஹ்வின் மாபெரும் அருட்கொடைகளாக இருக்கின்றார்கள்; எனினும், அவர்களை வளர்த்துப் பேணுவது ஒரு பெரும் **பொறுப்பாக** உள்ளது. "*நம்மில் ஒவ்வொருவரும் ஒரு பாதுகாவலராக இருக்கின்றோம் எனவும், நமது பராமரிப்பில் உள்ளவர்களுக்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்பேற்க வேண்டுமெனவும்*" ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் நமக்கு நினைவூட்டவில்லையா? குறிப்பாக, விரைவான மாற்றங்கள், கடுமையான போட்டி மற்றும் இணையதள உலகின் எல்லையற்ற செல்வாக்கு ஆகியவை நிறைந்த இக்காலத்தில் **இந்தப் பொறுப்பு** இன்னும் அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

எனது சகோதரர்களே! ஒரு தந்தையின் **பொறுப்பு** என்பது, தன் **பிள்ளைகளை** வெளி உலகின் தாக்கங்களிலிருந்து பாதுகாக்கும் சுவர்களைக் கட்டுவது மட்டுமல்ல, மாறாக, அவர்கள் அந்தத் தாக்கங்களை மீள் திறனுடனும், சகிப்புத் தன்மையுடனும் எதிர்கொள்ளும் வகையில் அவர்களுக்குள் ஒரு வலுவான அடையாள உணர்வையும் குணநலனையும் வளர்ப்பதாகும். புயல்களை எதிர்கொள்ளும் போது, எளிதில் வீழ்ந்து விடாதபடி உறுதியாக நிற்கும் ஒரு மரத்தைப் போன்று, ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கையிலும் நற்குணத்திலும் உறுதியாக நமது பிள்ளைகள் வேரூன்றியிருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், பெற்றோர்களாகிய நாம், முற்காலத்தில் வளர்ந்த போது சந்தித்த சவால்களை மட்டும் எதிர்கொள்வதற்கான பயிற்சியை வழங்குவதற்குப் பதிலாக, நம் **பிள்ளைகளை** அவர்கள் வாழும் காலத்திற்கேற்ப வாழவும், அக்காலத்தின் சவால்களை எதிர்கொள்ளவும் அவர்களுக்குப் பயிற்சியளிப்பதும் தயார் செய்வதும் நமது **பொறுப்பாக** இருக்கின்றது.

நமது **பிள்ளைகளின்** வளர்ச்சிக்கு **உதவியாக** இருக்கும் இரண்டு ஆலோசனைகளை இன்றைய "குத்பா" பிரசங்கம் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறது.

**முதலாவதாக: நாம் அவர்களுடன் இருப்பதை உணரச் செய்யுங்கள்.**

நமது அன்றாட வாழ்க்கையின் தேவைகள் மற்றும் அலுவல்களுக்கு மத்தியில், நமது **பிள்ளைகளுக்குத்** தேவையான நமது கவனத்தை நாம் அவர்களுக்குச் செலுத்தாமல் இருந்திருக்கலாம். எனினும், உடல் ரீதியாகவும் உணர்வுப்பூர்வமாகவும் நாம் அவர்களுடன் இருப்பதை அவர்கள் ஆழமாக விரும்புபவர்களாக இருக்கின்றார்கள். வீட்டில் அவர்கள் அரவணைப்பு, பாசம் மற்றும் கவனத்தை அனுபவிக்கவில்லையென்றால், ஆரோக்கியமற்ற வெளிப்புறத் தாக்கங்களுக்கு அவர்கள் எளிதில் ஆளாகி விடுவார்களோ என நாம் கவலைப்படுகிறோம்.

நமது **பிள்ளைகள்** ஏற்கனவே கல்விக்கூடங்களுக்குச் செல்பவர்களாக இருக்கலாம்; குழந்தைகளின் பராமரிப்பு மையத்திற்கும் செல்பவர்களாக இருக்கலாம்; அல்லது சன்மார்க்க வகுப்புகளில் கலந்து கொள்பவர் களாகவும் இருக்கலாம். இருப்பினும், அவர்களுக்குக் கல்வி கற்பிப்பதும், அவர்களை வளர்ப்பதும், அவர்களுக்குப் **பாதுகாப்பான** ஒரு இடத்தை வழங்குவதும் முதன்மையாக, பெற்றோரின் **பொறுப்பாகவே** உள்ளது.

**இரண்டாவதாக: பிள்ளைகளுக்கு நம்பகமான ஆதரவு அமைப்பை உருவாக்குங்கள்**

சில சமயங்களில், **குழந்தைகளை** வளர்க்கும் **பொறுப்பை** நாம் தனியாகக் கவனிக்கும் போது, அது கடினமானதாக உணரப்படலாம். எனவே, நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள், நம்பகமான நண்பர்கள் மற்றும் தொடர்புகள் அல்லது குழந்தைப் பராமரிப்பாளர்கள் ஆகியோர் மூலமாக நமக்கு ஒரு **பாதுகாப்பான** மற்றும் **நம்பகமான** ஆதரவு அமைப்பு தேவைப்படுகிறது.

உண்மையில், இந்தப் **பொறுப்பும்** ஆதரவு அமைப்பும் சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொருந்துவதாக உள்ளது. சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் **அப்பொறுப்பை** ஏற்கக் கடமைப்பட்டுள்ளார்கள். இது சம்பந்தமாக, ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் நமக்கு நினைவூட்டும் போது: *"இளைஞர்கள் மீது இரக்கம் காட்டாமலும் பெரியவர்களைக் கண்ணியப்படுத்தாமலும் இருப்பவர் நம்மைச் சேர்ந்தவர் அல்ல"* எனக் கூறியுள்ளார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்]

நமது சமூகங்களும் நிறுவனங்களும் **குழந்தைகளுக்குப்** பாதுகாப்பான இடங்களாக இருக்க வேண்டும்; அவர்களை அன்போடும் பொறுமை யோடும் வரவேற்று, கருணையுடன் வழிநடத்தும் இடங்களாக அவை இருக்க வேண்டும். கடந்த வெள்ளிக்கிழமை "குத்பா" பிரசங்கத்தில் நாம் சிந்தித்தது போல், இறுதியில் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது நம்பிக்கையையும் ஆதரவையும் வைத்து, நமது பிள்ளைகளுக்குச்

சாத்தியமான மிகச் சிறந்த **ஆதரவு அமைப்பை**, சமூக மக்களாகிய நாம் வழங்குவதற்குப் பாடுபட வேண்டும்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே**!

நாம் அனைவரும் ஒன்றிணைந்து, நமது பிள்ளைகளுக்குக் கல்வியறிவை அளித்து, அவர்களை வளர்த்துப் **பாதுகாத்து, ஆதரவளிக்கும்** ஒரு வலையமைப்பை [நெட்வொர்க்] உருவாக்குவோம்; இதற்காக நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியையும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா ஏற்று, அருள் புரிவானாக! நமது **பிள்ளைகளையும்** சந்ததியினரையும் அனைத்து வகைத் தீங்குகளிலிருந்தும் ஒழுக்கக் கேடுகளிலிருந்தும் அல்லாஹ் பாதுகாப்பானாக! மேலும், இம்மையிலும் மறுமையிலும் நமது பிள்ளைகளை நமது இதயங்களின் மகிழ்ச்சியாக ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اَلْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ

عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.